
உ

முருகன் துணை



சிவஸ்ரீ. பூரணானந்த சிவசுப்ரமணியக் குருக்களின்

அன்பு மகனும்

திருக்கோணமலை, வில்லூன்றிக் கந்தசுவாமி

தேவஸ்தான

பிரதம குருவும், ஆதீன கர்த்தாவுமாகிய

அமரர்.

# சுரானந்தேஸ்வர சர்மா

அவர்களின்

# நினைவு மலர்

22-04-2005

உதயன் திருக்கோணமலை 026-2220783

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் தெய்வத்திற்கு

# சமர்ப்பணம்

பக்தியுடன் பாசத்தை ஊட்டி

புத்தியுடன் நல்வாழ்வைக் காட்டி

எத்திசையும் புகழோடு வாழ

முத்திரை பதித்த எங்கள்

தெய்வமே

உங்களிற்கு இம்மலரை

நாம் சமர்ப்பிக்கின்றோம்.



குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்-

# சிவஸ்ரீ. பூரணானந்த சிவசுப்ரமணிய
# சுரானந்தேஸ்வர சர்மா
## அவர்கள்

மண்ணில் **19-12-1940**

விண்ணில் **13-04-2005**

## திதி வெண்பா

தாரண வருடம் தமிழ்ப் பங்குனி முப்பத்தொண்றில்
பூரண பஞ்சமி திதியதனில் - சுரானந்தேஸ்வர
சர்மா ஐயா கந்தன் கழலடியில் சென்று
அமர்ந்த இறை நாளிதுவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## விநாயகர் துதி

அப்பனே கணபதியே ஆனைமுகக் கற்பகமே
ஆதிசிவன் புத்திரனே அகண்ட பரிபூரணனே
ஒப்பரிய சோதியனே ஓங்கார மானவனே
ஓங்கு விக்னேஸ்வரனே உத்தமனேவந்து காத்தருள்வாய்

## தேவாரம்

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந்தேன் இனிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தெழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான் மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சி வாயவே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பிலே விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கி பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடைய தோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன்செ யம்பலத் தரசே
ஏறணி கொடியெம் மீசனே யுன்னைத்
தொண்டனே னிசையுமா றிசையே.

## திருப்பல்லாண்டு

மண்ணுகதில்லை வளர்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ உய்க்ககருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த பித்தற்கு
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

அண்ண லேயெனை யாண்டு கொண்டருளிய அமுதே
விண்ணி லேமறைந் தருள்புரி வேதநா யகனே
கண்ணி னாற்றிருக் கயிலையி லிருந்தநின் கோலம்
நண்ணி நான்தொழ நயந்தருள் புரியெனப் பணிந்தார்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற்குமரேசா
கறையானைக் கிளயோனே கதிர்காமப் பெருமானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் துணை



# கந்த சஷ்டி கவசம்

(காப்பு)

துதிப்போர்க்கு வல்வினைபோம்,
துன்பம்போம், நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம்
பலித்துக் - கதித்து ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும்,
நிமலர் அருள் கந்தர்
சஷ்டிக் கவசந் தனை.

## குறள் வெண்பா

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடிநெஞ்சே குறி

## நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பண்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடனஞ் செய்யும் மயில்வா கனனார்
கையில் வேலால்எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச, ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க,
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக,
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும், உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக,
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகு உடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிபட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகன
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
எந்தனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கையிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழி போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தான்எனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட்டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகை சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்றுப் பற்று பகலவன் தணலெரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தணலெரி தணலெரி தணலது வாக
விடு விடு வேலைவெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்பும் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீஎனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவளொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரக்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒரு நாள் முப்பத் தாறுருக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்த்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட்சு மிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவஸ்ரீ. சிவ.சுரானந்தேஸ்வர சர்மா அவர்களின்

## வாழ்க்கைச் சுருக்கம்

அருள்மறை ஆகம நெறிகளை ஓதி
அறம்காக்கும் அந்தணராகப் பிறந்து
திருமலை வில்லூன்றிப் பதியுறை கந்தன்
திருமேனி தழுவியே பூசைகள் செய்து
வருகின்ற தலைமுறை வம்சாவழியில்
வந்தசிவ சுப்பிரமணியக் குருக்கள்
பெருமாட்டி லலிதாம்பாளிருவரும் சேர்ந்து
பெற்ற முதல் மகன்தானே சுரானந்தமையா!

சுரானந்த மையாவின் உடன் பிறப்பாக
சுகமான ஐந்துபேர் சூழ வந்தார்கள்!
தரமான சச்சிதானந்தக் குருக்கள்
சியாமளேஸ்வரி மனோகர சர்மா
பிரபா கரரோடு ஹேம மாலினியும்
பிரியாத பாசத்தின் பிணைப்பாக இணைந்து
வரமாக வையத்தில் வாய்த்ததனாலே
வாழ்வினைச் சீராக நடத்தினாரையா?

வளமான பெற்றோரின் வழிகாட்டலோடு
வளம்பெற்று விளங்கிய சுரானந்தமையா
இளமைமுதல் எட்டிய காலம்வரை கல்வியை
இங்குயர் இந்துக் கல்லூரியில் பயின்றார்.
குலவழி வேத கிரியைகள் முறையை
குருவாக சிறு தந்தை சண்முகக் குருக்கள்
நலமாக ஓதியே நல்வழி காட்ட
நடந்தவர் நற்பணி செயல்களைப் பூண்டார்.

முற்பத்தி ஒருவயது வந்திட்ட போது
முறைப்படி திருமணம் செய்து கொடுக்க
அப்பாம்மா உறவினர் யாவரும் பார்த்து
அவரது விதிப்படி அமைந்திட்ட வாறு
செப்பிடும் சீர்பூத்த யாழ்நகர் மண்ணில்
சீர்முத்து குமாரசுவாமி குருக்கள்
பெற்றமகள் வசந்த கோகிலம் தன்னை
பெருமையுடன் மணமேற்று வாழச் செய்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லற வாழ்வினில் சுரானந்தமையா
இன்பமாய் வசந்த கோகிலமம்மா
நல்லறமாக நடந்ததன் பயனால்
நற்குண சுதாகர சர்மா முதலாய்
செல்வி என்ற மகள் ஜெயபாரதியும்
சின்னவர் சிவாகர சார்மாவினோடு
செல்வமாய் மூன்று சேய்களைப் பெற்று
சேவையாய் தெய்வப் பூசைபணி செய்தார்.

செல்ல மகள் செல்விக்கு ஜெகநிவாசனையும்
சுதாவுக்கு துணையாக ஸ்ரீ மனோகரியும்
இல்லற பந்தத்தில் இணைந்திட வேண்டி
ஏற்றபடி திருமணம் செய்து கொடுத்தார்!
நல்லபடி பேரப் பிள்ளைகளைக் கண்டு
நலங்காணு முன்னமே காலனுமவரை
வல்லோனின் திருப்பாதம் கொண்டு போனதனால்
வாடிடும் நிலையிது வையக விதியோ.

மச்சான்மார் மச்சாள் மார் உறவுகளென்று
மறக்கொணா மாபெரும் குடும்பத்தையேற்று
இச்சகம் தண்ணிலே இனிதுறவாழ்ந்த
இவரது நினைவுகள் என்றிங்குமாறும்?
வஞ்சகமில்லாத மனதோடு பழகி
வாழ்க்கையில் பலரது அன்பையும் பெற்று
நெஞ்சத்தில் நீங்காத இடந்தனை பிடித்தார்
நினைவுகள் வாட்டவே எமைவிட்டுப் பிரிந்தார்.

அன்போடு பண்பாக அனைவரையும் கவர்ந்து
ஆலயம் பலசென்று பூசைகளும் செய்து
என்றுமே எல்லோர்க்கும் ஏற்றவராய் வாழ்ந்து
இறைபதம் எய்திய சுரானந்தமையா
நன்றிங்கு ஆற்றிய நற்பணியெல்லாம்
நல்லவரிதயங்கள் மறந்திடுமாமோ?
இன்றவர் எம்முடன் இல்லாத போதும்
இவரது நினைவுகள் என்றிங்குமாறும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

**சிவஸ்ரீ. சிவசுப்பிரமணியக்குருக்கள் சுரானந்தேஸ்வரசர்மா**
அவர்களுக்கு

## ஆழ்ந்த அனுதாபங்கள்

காலஞ்சென்ற சிவசுப்பிரமணியக்குருக்கள் லலிதாம்பாள் தம்பதியினரின் மூத்தபுதல்வராக 19-12-1940 இல் அவதரித்தார். தந்தையார் சிவசுப்பிரமணியக்குருக்களோடும் பேரனார், பூரணானந்தேஸ்வரக் குருக்களோடும் இருந்தும் வில்லூன்றிக்கந்தப் பெருமானுக்கு பூஜா கருமங்களை பக்தியோடு செய்தவர். இராமலிங்கக்குருக்கள், பூரணானந்தேஸ்வரக்குருக்கள், சிவசுப்பிரமணியக்குருக்கள், சுரானந்தேஸ்வரசர்மா என நான்காவது தலைமுறையாக நின்று கந்தப்பெருமானின் "கழல் இறைஞ்சி முப்போதும் திருமேனி தீண்டி" பெரும்பேறு பெற்றவர்.

## சிவஸ்ரீ- சுரானந்தேஸ்வர சர்மா

**அவர்கள்.**

எந்நேரமும் சிரித்தமுகம் அன்பான வார்த்தை, செந்தண்மைகொண்டமனம் "என்கடன் பணிசெய்துகிடப்பதே" என்னும் நோக்கில் முருகப்பெருமானை வாழ்த்தி வணங்கி நின்றவர். அன்னாரின் மறைவு இன்று பிராமண சமூகத்தையும் சகலசைவ அன்பர்களையும் துயரத்தில் ஆழ்த்துகிறது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆலடி விநாயகர், பத்திரகாளி அம்மாள், கோணேசப் பெருமான், வில்லூன்றிக் கந்தன் ஆகியோரை நினைந்து வழிபடுவோமாக.

இவ்வண்ணம்

**பிரம்மஸ்ரீ. சோ. இரவிச்சந்திரக் குருக்கள்**

"வேதாகமமாமணி" ஆதீனகர்த்தா பிரதமகுரு.

பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்,
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

திருக்கோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி தேவஸ்தான
பிரதமகுருவும், ஆதீன கர்த்தாவுமாகிய

## அமரர். பிரம்மஸ்ரீ. சிவ சுரானந்தேஸ்வர சர்மா

இறையடி சேர்ந்து விட்டார்கள் என்பதை அறியத் தருவதில் வேதனை அடைகின்றோம்.

ஆலய வளர்ச்சிக்கு முன்னின்று பணியாற்றியவர். புதிய சித்திரத் தேர், கும்பாபிஷேகம், இலட்சார்ச்சனை, பரிவாரமூர்த்தியாக அனந்த சயனப்பெருமானை பிரதிஷ்டை செய்தல் போன்ற பல ஆலய முன்னேற்றத்துக்கான பணிகளை தன் காலத்தில் எம்முடன் சேர்ந்து நிறைவேற்றியுள்ளார்.

இராஜகோபுர பணி அமைய இருந்த நேரத்தில் அவரின் இழப்பு எமக்கு அதிர்ச்சியையும், வேதனையையும் தந்துள்ளது.

எங்களுடன் அன்பாகவும், பண்பாகவும், பழகி எமது ஆலோசனைகளுக்கும் மதிப்பளித்து இறைபணியை முன்னெடுத்துச் சென்ற பண்பாளர். எந்த நேரமும் வில்லூன்றிக் கந்தப் பெருமானின் சிந்தனையுடன் வாழ்ந்து, அவர்களின் பாதார விந்தங்களை சென்றடைந்துவிட்டார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், சுற்றத்தார்கள், அடியார்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம். ஐயாவின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இவ்வண்ணம்

**ஆ. ஆ. ஜெயரெட்ணம்,**
**ஞா. கதிர்காமதாசன்,**
**மணியகாரர்கள்.**

17-04-2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

திருக்கோணமலை வில்லூன்றிக் கந்தப் பெருமானின் பாதார விந்தங்களை நாள்தோறும் பணிந்து வணங்கிய தேவஸ்தான ஆதீன கர்த்தாவும், பிரதமகுருவுமாகிய

**அமரர்.**
**பிரம்மஸ்ரீ. சிவ சுரானந்தேஸ்வர சர்மா**

ஐயா அவர்கள் சிவபதமடைந்த செய்தி கேட்டு நாங்கள் அனைவரும் வேதனையடைகின்றோம்.

தந்தை சிவஸ்ரீ. பூரண சிவசுப்பிரமணியக் குருக்கள் 1975ம் ஆண்டு இறையடி சேர்ந்த பின் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக எம் பெருமானின் பணிகளை குறைவின்றிச் செய்து அடியார்களின் அன்புக்கு பாத்திரமானார். எமது சபையின் நிகழ்ச்சிகளுக்கு தவறாது கலந்து கொண்டு எமது பணிகளை ஊக்குவித்த பெரியார்.

ஐயாவின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அன்னாரின் மறைவால் வேதனையுறும் மனைவி, பிள்ளைகள், சுற்றத்தார்கள், அடியார்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வண்ணம்
ஸ்ரீ முருகன் தொண்டர் சபை
வில்லூன்றி, திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

திருக்கோணமலை வில்லூன்றிக் கந்தன்
ஆலய ஆதீன கர்த்தா

# அமரர். சிவசுப்பிரமணியக் குருக்கள்
# சுரானந்தேஸ்வர சர்மா

அந்தணர் என்போர்
அறவோர் என்னும்
வள்ளுவன் வார்த்தையை
வாழ்க்கையாய் கொண்டு
தானமும் தருமமும்
தாழ்விலா நீதியும்
எல்லோரும் வாழ்ந்திட
வாழ்த்திடும் இதயமும்
பொன்னே போன்ற
பூரித்த தோற்றமும்
வஞ்சகம் இல்லா
வார்த்தையும் கொண்டு
வந்தோர் தம்மை வரவேற்றென்றும்
வருவோருக்காக காத்தே இருந்து
வில்லுன்றிக் கந்தனின்
விழியே போல - எல்லோருக்கும்
ஒளியே தந்த ஒப்பற்ற ஐயா!
சுரானந்தேஸ்வரர்
சண்முகன் அழைத்திட
சடுதியில் போனார்.!

பணத்தை எண்ணிப் பெட்டியில் வைத்து
பக்குவமாக அதனை அடுக்கி
பேச்சுக்காக தருமம் பேசி
போலி வாழ்க்கை வாழும் உலகில்
உண்மை பேசி உத்தமனாக
கந்தன் பணியில் தன்னை இணைத்து
ஏழை மனிதர் வாழ வேண்டி
இறைவனுக்கு பூவினைச் சொரிந்த
புண்ணிய சீலா! சுரானந்தேசா!
அம்பிகை தந்த அருமைப் புதல்வா!
மானிட வாழ்க்கை நித்தியமல்ல
மனிதன் மறைவது வாழ்வில் சத்தியம்
இருக்கும் வரைக்கும் அறத்துடன் வாழ்வதே
மானிட வாழ்வின் தத்துவமாகும் - அந்த
வாழ்க்கை வாழ்ந்த உமக்கு
அடுத்த வீடு - அம்பிகை நிழலே!
சென்றே வருக! சீலனே ஐயா! நாம்
இருக்கும் வரைக்கும் எமக்கு துயரமே!

## சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



**நின் பிரிவால் துயருறும்**
**வ. விக்னேஸ்வரன் [நயினாதீவு]**
இலங்கை வங்கி,
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி
கோவிலடியைப் பிறப்பிடமாகவும்,
திருக்கோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி
தேவஸ்தானப் பிரதம குருவும் ஆதீன
கர்த்தாவுமாகிய

# சிவ சுரானந்தேஸ்வர சர்மா ஐயா

அவர்கள் 2005-04-13 ம் திகதி எம்மைவிட்டுப்
பிரிந்த துயரத்தில் எங்களது கண்ணீர்
அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

அந்தணர் வழியிற் தோன்றி அவர்வழி மரபாய்ச் செய்யும்
கந்தனின் பூசைத் தொண்டை கடமையாய் செய்து வாழ்ந்து
சிந்தையிலிடம் பிடித்த சுரானந்தமையா உங்கள்
சுந்தரவதனப் பேச்சு சீக்கிரம் துயின்றதேனோ?

வில்லூன்றியமர்ந்த கந்தன் விரைந்துமை எடுத்ததாலே
சொல்லொண்ணாத் துயரம் சூழ்ந்து சுட்டெம்மை எரிக்குதையா!
அல்லலில் வாடுமம்மா அன்பான சேய்களோடு
எல்லோருமின்றி உங்கள் இழப்பினால் வாடுகின்றோம்!

கள்ளமில்லாத உள்ளம் கரிநடை பயிலும் வண்ணம்
பள்ளம் மேடென்று ஏதும் பாகுபாடில்லா எண்ணம்!
அள்ளியே கொடுக்கும் தன்மை அண்டியே செய்யும் நன்மை
உள்ளத்தைக் கொண்ட ஐயா உறங்கியதேனோ? இன்று

எங்களின் மகளைச் சொந்த மகளெனத் தினமும் பார்த்து
என்னம்மா வேண்டுமென்று எவ்வளவோ செய்தீரையா
சின்னவள் மழலைப் பேச்சை சிரிப்புடன் சொல்லி சொல்லி
இன்பமாய் பகிர்வதெல்லாம் எப்படி மறப்போமையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியே பாப்பா என்று அன்புடனெங்கள் மகளை
தாவியே அரவணைத்து தளிர்மொழி கேட்பீரையா?
வேதியரானபோதும் வேற்றுமை ஏதுமின்றி
நீதியாய் பழகுமுங்கள் நினைவுகள் வாட்டுதையா?

மங்கள நிகழ்வுக்கெல்லாம் மனமுடன் வந்து நீங்கள்
எங்களின் குடும்பத்துக்கு எதுமுதற் செய்த போதும்
தங்களின் கைராசியால் தாழாமற் சிறக்குமையா!
உங்களின் பிரிவாலெங்கள் உளமெலாம் வெடிக்குதையா!

மெய்யென்ற உடம்பு வாழ்வு மெய்யில்லை என்று எண்ணி
உய்கின்ற ஈசன்பாதம் உண்மையை உணர்ந்து கொண்டு
பொய்யான உலகை விட்டு புறப்பட்டு நீங்கள் போக
கையொன்று கழண்டது போல் கவலைகள் வாட்டுதையா

நெஞ்சத்திலெந்த நாளும் நீங்காத இடம் பிடித்த
சஞ்சலம் கொள்ளா அன்புச் சுரானந்தமையா உங்கள்
வஞ்சகமில்லாப் பாதம் வணங்கியே கண்ணீரோடு
அஞ்சலி செலுத்தி ஆன்ம சாந்திக்காய் வேண்டுகின்றோம்!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இவ்வண்ணம்
ஐயாவின் பிரிவால் துயரடையும்
வி. சிகண்டிதாசன் குடும்பம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## அமரர்.

## பிரம்மஸ்ரீ. சிவ சுரானந்தேஸ்வர சர்மா

## ஐயா அவர்கள்

## நாளும் உங்களை நினைப்போம்!

தேவாரம் பாடப் பெற்ற தெய்வத் திருநகரான திருக்கோணமலைத் திருநகரில் புகழ் பூத்த அந்தணக் குடும்பத்தில் வில்லூன்றிக் கந்தப்பதியில் பிறந்து நடைபயின்று தி. இ. கி. ச. இந்துக் கல்லூரியில் கல்வி பயின்று குலப்பெருமை காக்க சிவாச்சாரிய அபிஷேகம் பெற்று சிவத்திரு பூரணக் குருக்கள் ஐயாவின் பேரனாக எம்மோடெல்லாம் நட்புரிமையுடன் பழகியதை நாம் மறப்போமா? ஐயா, உங்களை இழந்து திருக்கோணமலை மாவட்டமே கண்ணீர் சொரிகின்றது.

## என்றென்றும் உங்களை

## நாம் மறவோம் ஐயா



ஆத்மா சாந்தியடையக் கோணேசப்
பெருமானையும் வில்லூன்றிக் கந்தனையும்
வேண்டுகின்றோம். உங்களை இழந்து
மீளாத்துயரில் ஆழ்ந்திருக்கும்
சுற்றத்தார், அயலவர்கள், நண்பர்கள்,
ஸ்ரீ முருகன் தொண்டர் சபையினர்,
யாவருக்கும் கோணேசமாமலைப்
பெருமானை ஆறுதல் அளிக்க
வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.



திருக்கோணமலை
மாவட்ட இந்து இளைஞர் பேரவை

தி. மா. இ. இ. பேரவை,
294/1. உட்துறைமுகவீதி, திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபதமடைந்த திருக்கோணமலை வில்லூன்றிக்
கந்தசுவாமி கோயில் பிரதம குருவும் ஆதீன
கர்த்தாவுமாகிய

## சிவ சுரானந்தேஸ்வர சர்மா ஐயா

அவர்களுக்கு எங்களது கண்ணீர் அஞ்சலியை
செலுத்துகின்றோம்.

அன்போடு பண்பாக
அனைவரோடும் பேசிப் பழகும்
சுரானந்தேஸ்வர ஐயா!

திருக்கோணமலை வில்லூன்றிக் ஆலயத்தில்
நீங்கள் ஆற்றிய அரும்பணியை
அனைவருமே யறிவர்!

குழந்தை மனமும் குறுநகையும்
பாகுபாடின்றிப் பழகும் குணமும்
உதவி செய்யும் தன்மையும்
கொண்ட உங்களது இழப்பு
ஈடுசெய்ய முடியாத தொன்றே!

உங்களது பிரிவால் துயரடையும்
உங்கள் குடும்பத்தாருடன்
நாங்களும் கவலையுடன்
ஆன்ம சாந்திக்காக
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.!

உம் ஆன்ம சாந்திக்காக
வேண்டி நிற்கும்
ஓலின்வன் ஸ்தாபனத்தின்
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகனின் திருமுகங்கள்

ஒரு முகத்துடன் அருள்பாலிக்கும் முருகப் பெருமானை எல்லா கோயில்களிலும் தரிசிக்கலாம்.

இரண்டு முகங்கள் கொண்ட முருகப்பெருமானை, சென்னிமலைத் திருத்தலத்தில் தரிசிக்கலாம். இவர் எட்டுத் திருக்கரங்கள் உள்ளவர்.


மூன்று முகங்கள், ஆறு திருக்கரங்களுடன் அருள்புரியும் முருகனை பெரியார் மாவட்டம் காசியம்பாளையம் என்னும் திருத்தலத்தில் தரிசிக்கலாம்.

நான்கு முகங்கள் கொண்ட சதுர்முக முருகன் திருவுருவத்தை, திண்டுக்கல்லுக்கு அருகில் உள்ள சின்னாளப்பட்டி திருத்தலத்தில் தரிசிக்கலாம். இவர் பன்னிரண்டு திருக்கரங்களுடன் மயில் மீது அமர்ந்து அருள்புரிகிறார்.

ஐந்து முகங்கள் கொண்ட முருகன் திரு உருவத்தினை, கோவை மாவட்டம் புன்செய் புளியம்பட்டி அருகில் உள்ள ஓதிமலை என்ற திருத்தலத்தில் காணலாம். இவருக்கு எட்டுக் கைகள். இவர் நின்று கொண்டிருக்கும் பீடத்தில் மயில் வாகனம் காட்சி தரும்.

ஆறு முகங்கள், பன்னிரண்டு கரங்களுடன் மயில் மீது அமர்ந்த நிலையில் முருகனை வயலூர் திருத்தலத்தில் காணலாம்.

**-பொன்மலை பரிமளம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது குடும்பத் தலைவர்

**சிவஸ்ரீ- சிவ சுரானந்தேஸ்வர சர்மா**

அவர்களின் மரணச் செய்தி கேட்டு உடன் வந்து அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறி எம்முடன் இருந்து உதவிகள் பல புரிந்தவர்களுக்கும் தொலைபேசி, தந்தி, தபால் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகளை வெளியிட்டவர்களுக்கும், பதாதைகள் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், இறுதிக்கிரியைகளின் போது நேரில் வந்தவர்களுக்கும் அதற்கான சகல ஒழுங்குகள், ஒத்தாசைகள் புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களிற்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



இவ்வண்ணம்

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.**

இல. 179, சங்க வீதி,
வில்லூன்றிக் கந்தசாமி கோவில்,
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா

பூரணானந்த சிவசுப்ரமணியக்

**சுரானந்தேஸ்வர சர்மா**
\+
வசந்தகோகிலம்

சச்சிதானந்தக் குருக்கள்
\+
சுந்தராம்பாள்

சியாம
ஜெகநாதக்

உமாக
பிரகத
ஜெயகார
ராஜசுந்த

சுதாகர சர்மா
\+
ஸ்ரீ மனோகரி

ஜெயபாரதி
\+
ஜெகநிவாச சர்மா

சிவகர சர்மா

யசஸ்கர
\+
பிரகதீ

ஹரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

ரமணியக் குருக்கள் + லலிதாம்பாள்

- ள்
- சியாமளேஸ்வரி + ஜெகநாதக் குருக்கள்
  - உமாகர சர்மா
  - பிரகதீஸ்வரி
  - ஜெயகாந்த சர்மா
  - ராஜசுந்தர சர்மா
- மனோகர சர்மா
- பிரபாகர சர்மா + சாருகேசி
  - பிரியங்கா
  - ஆதித்யா
- ஹேமமாலினி + சிவபாலசர்மா
  - லாவண்யா
  - சங்கர்சர்மா

---

- யசஸ்கர சர்மா + பிரகதீஸ்வரி
  - ஹரிணி
- அபர்ணா + இந்துசேகர சர்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந்தாரே

**(சம்பந்தர் தேவாரம்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org